தரம் 10

# முதலாம் தவணைப் பரீட்சை - 2019

## வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும் - I, II

சேர்விலக்கம் : 	நேரம் : 3 மணித்தியாலம்

பகுதி I

- சகல வினாக்களுக்கும் விடை தருக.
- சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

126

- பின்வரும் நிகழ்வின் உதவியுடன் 01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.

"சயான் வெஹிகல் ரென்ட்" எனும் பெயரில், மோட்டார் கார், மோட்டார் வான் போன்றவற்றை வாடகைக்கு விட்டுவரும் சயான் தனது நண்பனான சியானையும் தனது வணிகத்தில் இணைத்துக் கொள்வதற்கு எண்ணியுள்ளார்.

1. இவ்வணிகத்தினால் நிறைவு செய்யப்படும் தேவை எது?
   1. மோட்டார் சேவை 2. பாதுகாப்பு 3. போக்குவரத்து 4. இருப்பிடம்

2. இவ்வணிகம் தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களுள் பொருத்தமான கூற்று எது?
   1. இது ஒரு உற்பத்தி நிறுவனமாகும். 2. இது ஒரு சேவை வழங்கும் நிறுவனமாகும்.
   3. இது ஒரு பங்குடைமை நிறுவனமாகும். 4. இதனைக் கட்டாயம் பதிவு செய்தல் வேண்டும்.

3. தேவையின் பண்பொன்றாகக் குறிப்பிட முடியாதது
   1. அத்தியவசியமானவை 2. வரையறுக்கப்பட்டவை
   3. பொதுத்தன்மை கொண்டவை 4. பரவலானவை

4. இந்நிறுவனத்தில் பயன்படுத்தப்படுகின்ற மோட்டார் வான், மோட்டார் கார் என்பவை எவ்வுற்பத்திக் காரணிக்குரியன?
   1. நிலம் 2. உழைப்பு 3. மூலதனம் 4. முயற்சி

5. இந்நிகழ்வில் குறிப்பிடப்படுகின்ற வணிகத்தில் அக்கறை செலுத்தும் பிரிவினர் ஒருவர்
   1. வழங்குநர் 2. உரிமையாளர் 3. ஊழியர் 4. முகாமையாளர்

6. பின்வருவனவற்றுள் அரசாங்கத்திடமிருந்து வணிகம் எதிர்பார்க்கும் பங்களிப்பு எது?
   1. வரிச்சலுகைகளை வழங்கல் 2. தரமான மூலப்பொருட்களை வழங்கல்
   3. உழைப்புத்திறனை அதிகரித்துக் கொள்ளல் 4. தீர்மானமெடுத்தல்

7. வணிகத்தின் அகச் சூழல் காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி எது?
   1. உரிமையாளர், வழங்குநர், போட்டியாளர் 2. உரிமையாளர், முகாமையாளர், வழங்குநர்
   3. உரிமையாளர், ஊழியர், வாடிக்கையாளர் 4. உரிமையாளர், ஊழியர், முகாமையாளர்

8. ஏதேனும் வணிகமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திக்குச் சமமான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வோர்
   1. போட்டியாளர் எனப்படுவர் 2. வழங்குநர் எனப்படுவர்
   3. உரிமையாளர் எனப்படுவர் 4. ஊழியர் எனப்படுவர்

9. மொத்த வியாபாரம், சில்லறை வியபாரம் என்பன
   1. பொருள் உற்பத்தி வணிகங்களாகும். 2. சேவை உற்பத்தி வணிகங்களாகும்.
   3. பேரளவு வணிகங்களாகும் 4. சிற்றளவு வணிகங்களாகும்.



kalvi.lk
Scanned with CamScanner

10. ஒரு வணிகமொன்றை சிறப்பாக நடத்துவதற்கு வணிகத்திட்டம் முக்கியமானது. வணிகமொன்றின் வணிகத் திட்டத்தை உரிய முறையில் செயற்படுத்துபவர்.
1. ஊழியர்களாவர் 2. உரிமையாளராவார் 3. முகாமையாளராவார் 4. அரசாங்கமாகும்

11. கீழே சில நிகழ்வுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் வணிகத்தின் சட்டச் சூழலுடன் தொடர்புடைய நிகழ்வுகளாகக் குறிப்பிடக் கூடியவை
a) டெங்கு நுளம்பு பெருக்கத்தை தடுப்பதற்காக பொதுச் சுகாதார பரிசோதகர் வீட்டுக்கு வீடு சென்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி, வீட்டுச் சூழலை பரிசோதித்தல்.
b) அரசானது முழு நாட்டினதும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
c) சில பொருட்களுக்கு அரசு விதிக்கின்ற கட்டுப்பாட்டு விலையினை வணிகங்கள் சரியாகப் பின்பற்றுகின்றார்களா என்பதனை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை பரிசீலித்து வருகின்றது.
1. A யும் B யும் மாத்திரம் 2. A யும் C யும் மாத்திரம்
3. A மாத்திரம் 4. A, B, C சகலதும்

12. அரசானது க.பொ.த (உயர்தரம்) கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மடிக்கணனிகளை (லப்டொப்) வழங்கி அவர்களின் கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்த தீர்மானித்துள்ளது. இச்செயற்பாடு ஒரு.
1. பொருளாதார சூழல் காரணியாகும். 2. சட்டச் சூழல் காரணியாகும்.
3. அகச் சூழல் காரணியாகும் 4. தொழில் நுட்பச் சூழல் காரணியாகும்.

13. தனி நபர்களின் வருமானத்தில் நுகர்வுக்காகச் செலவிடாது வைத்திருக்கும் தொகை (1) .................. எனப்படுவதுடன், நாட்டில் இது அதிகரிக்கும் போது (2) .................. ம் அதிகரிக்கும்
மேலே (1), (2) எனத்தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான விடையினை முறையாகக் காட்டும் விடை எது?
1. பணவீக்கம், வட்டிவீதம் 2. சேமிப்பு, முதலீடு
3. முதலீடு, சேமிப்பு 4. சேமிப்பு, பணவீக்கம்

Education கல்வி අධ්‍යාපන

- பின்வரும் தகவல்களின் உதவியுடன் 14ம், 15ம் வினாக்களுக்கு விடையளிக்க.
இன்று நாடுகளுக்கிடையில் காணப்படுகின்ற இடைவெளிகள் குறைக்கப்பட்டு பொருட்கள், சேவைகள், உழைப்பு, மூலதனம் என்பன தடையின்றி, நாடுகளுக்கிடையில் பரிமாறப்படுகின்றன.

14. மேலே தரப்பட்ட நிலைமை ஏற்பட்டுள்ளமைக்கான முக்கிய காரணம்
1. அகச்சூழல் காரணி 2. பூகோளமயச் சூழல் காரணி
3. பொருளாதாரச் சூழல் காரணி 4. அரசியல் சூழல் காரணி

15. இச்சூழல் காரணியினால் தற்போது எமது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள சாதகமான விளைவொன்று
1. நாட்டிலுள்ள புத்தி ஜீவிகள் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுக் செல்லல்.
2. நாட்டின் மூவின மக்களினதும் ஆடையணிகளில் பாரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை.
3. நாட்டின் முதலீட்டுத் திட்டங்களில் பாரியளவு வெளிநாட்டு முதலீடுகள் முதலிடப்பட்டுள்ளமை.
4. வெளிநாட்டு இறக்குமதிப் பொருட்களுடன் உள்நாட்டுப் பொருட்கள் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமை

- பின்வரும் தகவல்களின் உதவியுடன் 16ம், 17ம் வினாக்களுக்கு விடையளிக்க.
வணிகமொன்றில் காணப்படுகின்ற பலங்கள் சிலவும், வாய்ப்புக்கள் சிலவும் கீழே தரப்பட்டுள்ளன.
A - முகாமையாளர் அனுபவம்
B - புதிய நகரங்கள் உருவாக்கப்படல்
C - நவீன உற்பத்தி முறைகள்
D - அதிவேகப் பாதைகள் நிர்மாணிக்கப்படல்

16. மேற்குறிப்பிட்டவற்றுள் வணிகங்களுக்குரிய வாய்ப்புக்களை மாத்திரம் காட்டுபவை எவை?
1. A, C, D மட்டும் 2. A, B மட்டும் 3. B, D மட்டும் 4. B, C மட்டும்

17. மேற்குறிப்பிட்டவற்றுள் பலங்களாகக் குறிப்பிடக் கூடியவை
1. A யும் C யுமாகும் 2. A, C, D ஆகும் 3. B, D ஆகும் 4. B, C, D ஆகும்



kalvi.lk
Scanned with CamScanner

18. பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1. இலங்கையில் கூடுதலாக பொதுத்துறை நிறுவனங்களே காணப்படுகின்றன.
2. உடமையாளர், ஒருவர் வணிக முகாமைத்துவம் தொடர்பில் உயர் கல்வியைப் பெற்றுக் கொள்வது வணிகத்திற்குரிய வாய்ப்பொன்றாகும்.
3. புறச்சூழல் காரணிகளின் செயற்பாட்டிற்கேற்ப வணிகங்கள் இயைபாக்கமடைந்து செயற்படல் வேண்டும்.
4. பொதுத்துறை நிறுவனங்களை மாத்திரமே வணிகங்களால் கட்டுப்படுத்த முடியும்.

19. தற்போது நாட்டில் அடிக்கடி வரட்சி, பாரிய மழை, மண் சரிவுகள் என்பவை ஏற்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இந்நிலமை வணிகங்களுக்கு ஒரு
1. வாய்ப்பாகும் 2. பலமாகும் 3. பலவீனமாகும் 4. அச்சுறுத்தலாகும்

20. வணிகமொன்றில் மூலதனமிட்டு, அதில் ஏற்படும் நட்ட இடர்களை ஏற்றுக் கொள்பவர்.
1. முகாமையாளராவார் 2. உரிமையாளராவார் 3. ஊழியராவார் 4. அரசாகும்

21. இலங்கையிலுள்ள வணிகங்கள் பல்வேறு வகைகளில் வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வகைகளில் ஒன்றாகக் குறிப்பிட முடியாதது
1. செயற்பாட்டு அடிப்படை 2. உரிமை அடிப்படை
3. நோக்க அடிப்படை 4. பருமன் அடிப்படை

22. வணிகங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - திணைக்களம் B - கூட்டுத்தாபனம் C - அரச கம்பனிகள்
D - கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் E - கூட்டுறவு
இவற்றுள் அரச துறை சாரந்த சட்ட ஆளுமை உள்ள வணிகங்கள் எவை?
1. A,B மாத்திரம் 2. A, B, C மாத்திரம் 3. B, C, E மாத்திரம் 4. B,C மாத்திரம்

23. பின்வரும் கூற்றுக்களுள் பிழையான கூற்று எது?
1. அரசு மூலதனமிட்டு அரசுக்கு உரிமையாகவுள்ள வணிகங்கள் பொதுத்துறை வணிகங்களாகும்.
2. இலங்கையில் கூடுதலாக தனியுரிமை வணிகங்களே காணப்படுகின்றன.
3. பங்குடைமையொன்றின் ஆகக் குறைந்த பங்காளர் எண்ணிக்கை 01 ஆகும்.
4. இலங்கையில் கூடுதலாக வாண்மைத் தொழிலில் ஈடுபடுபவர்களே பங்குடைமையாக தனது வணிகத்தை நடத்திச் செல்கின்றனர்.

24. தனியுரிமை வணிகத்தின் அனுகூலமொன்றாகக் குறிப்பிடக்கூடியது.
1. சட்ட ஆளுமை காணப்படல் 2. இலகுவாக ஆரம்பிக்க முடிதல்
3. கூடுதலான மூலதனம் திரட்ட முடிதல் 4. வரையறுக்கப்பட்ட பொறுப்பு

♦ **பின்வரும் தகவல்களின் உதவியுடன் 25ம், 26ம், 27ம் வினாக்களுக்கு விடையளிக்க.**

வணிகங்களின் வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - பங்குடைமை B - கம்பனிகள் C - கூட்டுத்தாபனம்
D - கூட்டுறவு E - திணைக்களம்

25. ஆகக்குறைந்த அங்கத்தவர்கள் எண்ணிக்கை 10 பேருடன் ஆரம்பிக்கக் கூடிய வணிக அமைப்பு
1. A 2. B 3. C 4. D

26. தனியார் துறை சார்ந்த வணிக அமைப்புக்களாவன.
1. A, B, D 2. A, B, E 3. C, D, E 4. B, E, D

27. அரசானது ஊழியர்களை நியமித்து நடைமுறைப்படுத்துவதும் பொது மக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்குவதற்காகவும் காணப்படுகின்ற நிறுவனம்.
1. A யாகும் 2. C ஆகும் 3. E ஆகும் 4. D ஆகும்


kalvi.lk
Scanned with CamScanner

மத்திய அரசின் கீழ் செயற்படுகின்ற வணிகமொன்றாகக் குறிப்பிட முடியாதது.
1. திணைக்களம் 2. கம்பனிகள் 3. கூட்டுத்தாபனம் 4. திணைக்களம்

பங்குடைமையொன்றின் பங்காளர் எண்ணிக்கையினை வரையறுக்கின்ற சட்டம் எது?
1. வணிகப் பெயர்கட்டளைச் சட்டம் 2. பங்குடைமைக் கட்டளைச் சட்டம்
3. கம்பனிச் சட்டம் 4. மோசடித் தவிர்ப்புச் சட்டம்

தனியுரிமை வணிகமொன்றை பதிவு செய்வதற்குரிய சான்றிதழை வழங்குபவர்
1. பிரதேச செயலாளராவார் 2. பிரதேச சபைத் தலைவராவார்
3. கல்விப் பணிப்பாளர் ஆவார் 4. வர்த்தக அமைச்சராவார்

மோசடித் தவிர்ப்புச் சட்டத்தின் மூலம்
1. வணிகங்களின் மோசடிகளிலிருந்து நுகர்வோர் பாதுகாக்கப்படுவர்.
2. பங்குடைமையானது ரூபா 1000 வை விட கூடிய மூலதனத்துடன் ஆரம்பிக்கப்படின், பங்காளர்களிடையே எழுத்து மூலமான ஒப்பந்தம் இருத்தல் வேண்டும்.
3. பங்குடைமையொன்றின் பங்காளர் எண்ணிக்கையினை வரையறுக்கின்றது.
4. பங்குடைமையொன்றின் அனைத்துப் பங்காளரினதும் பெயரை உள்ளடக்கியதாக வணிகத்திற்கு பெயர் இடப்படுமாயின் அதனைப் பதிவு செய்ய வேண்டியதில்லை என கூறுகின்றது.

32. இயக்குநர்களினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற வணிக அமைப்பு பின்வருவனவற்றுள் எது?
1. திணைக்களம் 2. கம்பனி 3. தனியுரிமை 4. பங்குடைமை

33. பின்வரும் நிறுவனங்களுள் பொது மக்களுக்கு பங்குகளை வழங்கி நிதி திரட்டக் கூடிய நிறுவனம் எது?
1. வரையறுக்கப்பட்ட சகத் தனியார் கம்பனி 2. வரையறுக்கப்பட்ட சீ டெக்ஸ் பொதுக்கம்பனி
3. காந்தி டெக்ஸ்டைல்ஸ் 4. சில்மா அன்ட் சார்ஸ்

34. கூட்டுறவுச் சங்கத்தின் அனுகூலமொன்றாகக் குறிப்பிட முடியாதது
1. சனநாயக நிர்வாகம் காணப்படல் 2. மிகை இலாபம் பங்கிடப்படல்
3. வரையறுக்கப்படாத மூலதனம் 4. அங்கத்தவர் நலன் கருதி செயற்படல்

35. பின்வருவனவற்றுள் சமூக நலனை மாத்திரம் நோக்காகக் கொண்டு செயற்படாத நிறுவனம் எது?
1. ஸ்டார் விளையாட்டுக் கழகம் 2. ஜனசத்து விவசாயக் கழகம்
3. பாடசாலை நலன்புரிச் சங்கம் 4. மாவத்தகம பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம்

36. இலங்கைப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுகின்ற விசேட அல்லது பொது சட்டத்தினால் உருவாக்கப்படுகின்ற வணிகம்
1. கூட்டுறவு 2. கூட்டுத்தாபனம் 3. கம்பனி 4. பங்குடைமை

37. பின்வருவனவற்றுள் சேவை வழங்கும் கூட்டுத்தாபனமாக அமைவது
1. இலங்கை ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனம் 2. அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
3. இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம் 4. இலங்கை மரக் கூட்டுத்தாபனம்

38. அரச திணைக்களங்களின் அனுகூலமொன்றாகக் குறிப்பிட முடியாதது
1. பொதுமக்களுக்கு சேவைகளை வழங்கல் 2. வேலை வாய்ப்புக்களை வழங்கல்
3. இயக்குநர் சபையினால் நிர்வகிக்கப்படல் 4. இலாபத்தை எதிர்பாராது செயற்படல்

39. வணிகமொன்றின் முகாமைத்துவக் கருமமாகக் குறிப்பிட முடியாதது
1. தீர்மானம் செய்தல் 2. திட்டமிடல் 3. ஒழுங்கமைத்தல் 4. கட்டுப்படுத்தல்

40. பாடசாலையொன்றின் முகாமைத்துவக் கருமங்கள் மேற்கொள்ளப்படுவது
1. ஆசிரியர்களினாலாகும் 2. கல்விக் காரியாலயத்தினாலாகும்
3. அதிபரினாலாகும் 4. கல்வி அமைச்சினாலாகும்



kalvi.lk
Scanned with CamScanner

பகுதி II

- சகல வினாக்களுக்கும் விடையளிக்க.

1. பின்வரும் நிகழ்வினை வாசித்து அதன் கீழ் வழங்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

ஹர்சனி சில்வா க.பொ.த (உயர்தர)ப் பரீட்சையில் மனையியல் பாடத்தையும், அத்துறையில் பாடநெறியொன்றையும் கற்றுத் தேறிய ஒரு பெண் மாணவியாவார். மனையியல் பாடத்தில் கற்ற விடயங்களைப் பயன்படுத்தி அவள் உப்பு தேசிக்காய், ஜேம் (மாம்பழம், விளாம்பழம், பப்பாசி போன்ற பழங்களைப் பயன்படுத்தி) என்பவற்றைத் தயாரித்து அவற்றை போத்தலிலிட்டு விற்பனை செய்து வந்தாள். இவ்வணிகத்தை செய்வதற்குத் தேவையான நிதியினை கடனாக அவள் தந்தை வழங்கியிருந்தார். இப்பொருட்களைத் தயாரிப்பதற்கு உதவியாக கிராமத்து பெண்களும், விற்பனைக்காக பொருட்களை கொண்டு செல்வதற்கு ஒரு ஊழியரும் நிறுவனத்தில் காணப்பட்டனர். தனது நிறுவனத்திற்கு "ஹர்சனி சில்வா உற்பத்திகள்" எனப் பெயரிட்டிருந்தார். இவர் தனது உற்பத்திகளைச் சில்லறை வணிக நிலையங்களுக்கு வழங்கி வந்ததுடன், தனது விற்பனை நிறுவனத்திலும் அப்பொருட்களை பொதுமக்களுக்கு விற்பனை செய்து வந்தார். இங்கு விற்பனை செய்யும் பொருட்கள் தரமானவையாகவும், கலப்படமின்றியும் காணப்பட்டமையால் மக்களிடம் சிறந்த கேள்வி இதற்கு காணப்பட்டது. வணிகத்தை விரிவு படுத்துவதற்கு மூலதனப் பற்றாக்குறையாகக் காணப்பட்டமையால் தனது தோழியாகிய தர்சனியைப் பங்காளராக சேர்ப்பதன் மூலமும் மக்கள் வங்கியிடமிருந்து கடனொன்றையும் பெற்றுக் கொள்வதன் மூலமும் வணிகத்தை விரிவுபடுத்த எண்ணியுள்ளார்.

i) அ) இந்நிறுவனத்தினால் நிறைவு செய்யப்படும் தேவை எது?
   ஆ) அதன் பண்பொன்றைத் தருக.
ii) விருப்பம் என்றால் என்ன?
iii) உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தன்மைக் கேற்ப இவ்வணிகம் எவ்வணிக வகையைச் சார்ந்தது?
iv) இவ்வணிககத்திலுள்ள பலம் ஒன்றையும், பலவீனமொன்றையும் குறிப்பிடுக.
v) ஹர்சனி தனது வணிகத்தை தனியுரிமை வணிகமாக நடாத்திச் செல்வதனால் ஏற்படும் பிரதிகூலங்களைத் தருக.
vi) ஹர்சனி தனது வணிகத்தின் பெயரை பதிவு செய்தல் வேண்டும் எனக் கூறுகின்றாள். இதனை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா காரணத்தைத் தருக.
vii) வணிகமொன்றைப் பதிவு செய்வதனால் கிடைக்கப் பெறும் இரு நன்மைகளைத் தருக.
viii) ஹர்சனி தனது வணிகத்தை பங்குடைமையொன்றாக மாற்றுவதனால் கிடைக்கப் பெறும் இரு நன்மைகளைத் தருக.
ix) பங்குடைமையினைப் பதிவு செய்யும் சட்டத்தையும் தேவைப்படும் ஆவணங்களையும் குறிப்பிடுக.
x) இந்நிகழ்வில் குறிப்பிடப்படுகின்ற உற்பத்திக் காரணிகளைத் தருக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

2. i) விருப்பங்களின் இரு பண்புகளைத் தருக.
ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மை அல்லது பொய் என்பதைக் குறிப்பிடுக.
   அ) பொழுதுபோக்கு மனிதனின் அத்தியவசியத் தேவையொன்றாகும்.
   ஆ) தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் வணிகமொன்றின் துணை நோக்கமாகும்.
   இ) மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யும் நிறுவனமானது சேவை உற்பத்தி வணிகங்களாகும்.
   ஈ) வணிகங்களில் புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்துபவர் உரிமையாளராவார்.
iii) உற்பத்திக் காரணிகளில் "உழைப்பு" என்றால் என்ன என்பதை விளக்கி அதற்கு இரு உதாரணங்களைத் தருக.
iv) முகாமையாளர், முயற்சியாளர் இருவரையும் வேறுபடுத்திக் காட்டுக. (மொத்தம் 10 புள்ளிகள்)



kalvi.lk

Scanned with CamScanner

3. i) வணிகமொன்றில் அக்கறை செலுத்தும் இரு பிரிவினர்களைக் குறிப்பிட்டு, அவ்வாறு அவர்கள் அக்கறை செலுத்துவதற்கான காரணமொன்றையும் தருக.

ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மை அல்லது பொய் என்பதைக் குறிப்பிடுக.

அ) அரசிடமிருந்து வரிச்சலுகைகளை பெற்றுக் கொள்வதே வணிகங்களின் நோக்கமாகும்.

ஆ) வாடிக்கையாளர் வணிகச் சூழலிலுள்ள அகச் சூழல் காரணியொன்றாகும்.

இ) ஊழியர், வாடிக்கையாளர்களுக்கிடையிலான சிறந்த தொடர்பு முகாமையாளர்களாலேயே கட்டியெழுப்பப்படுகின்றது.

ஈ) தனது அறிவு திறன் என்பவற்றைப் பயன்படுத்தி வழங்கப்பட்ட கருமங்களை சரியான முறையில் நிறைவேற்றுவோர் வாடிக்கையாளர்கள் ஆவர்.

iii) வணிகத்திலுள்ள அகச் சூழல் காரணிகளை நிறுவனங்களினால் கட்டுப்படுத்த முடியும். எனினும் புறச்சூழல் காரணிகளை நிறுவனங்களினால் கட்டுப்படுத்த முடியாது.

அ) அகச்சூழல் காரணிகள் என்றால் என்ன?

ஆ) பின்வரும் சூழல் காரணிகள் அகச்சூழல் காரணியா? புறச்சூழல் காரணியா? என்பதைக் குறிப்பிடுக.

1) ஊழியர் 2) வழங்குநர் 3) போட்டியாளர் 4) உரிமையாளர்

iv) பின்வரும் விடயங்களுடன் சம்பந்தப்பட்ட சட்டங்களைக் குறிப்பிடுக.

அ) புதிதாகக் கம்பனியொன்றை பதிவு செய்தல்.

ஆ) பங்குடைமையின் பெயரினைப் பதிவு செய்தல்.

இ) கூட்டுறவுச் சங்கமொன்றினைப் பதிவு செய்தல்.

ஈ) தனியுரிமையின் பெயரினைப் பதிவு செய்தல். (மொத்தம் 10 புள்ளிகள்)

4) i) இலங்கையிலுள்ள வணிகங்கள் அவற்றின் செயற்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு முறைகளில் வகைப்படுத்தப்படுகின்றன.

அ) இலங்கையிலுள்ள வணிகங்களை பருமன் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.

ஆ) இலாப நோக்கற்ற தனியார்துறை சார்ந்த வணிகமொன்றைத் தருக.

ii) பின்வரும் கூற்றுக்கள் "உண்மை" அல்லது "பொய்" என்பதைக் குறிப்பிடுக.

அ) கிராமப் புறங்களில் செயற்படுகின்ற மாட்டிறைச்சி விற்பனை நிலையங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வணிக நிறுவனமாகும்.

ஆ) கம்பனிகள் சட்ட ஆளுமையற்ற வணிகங்களாகும்.

இ) சுதந்திரமாக தீர்மானமெடுக்க முடியாமை பங்குடைமையில் காணப்படுகின்ற நன்மைகளில் ஒன்றாகும்.

ஈ) விளையாட்டுக் கழகங்களுக்கு சட்ட ஆளுமை காணப்படுகின்றது.

iii) "பங்குடைமை உறுதி" (Partnership deed) என்றால் என்ன?

iv) நட்டப் பொறுப்பு வரையறுக்கப்பட்ட இரு வணிக அமைப்புக்களைத் தருக.

(மொத்தம் 10 புள்ளிகள்)

5. i) கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் இரு பிரதிகூலங்களை தருக.

ii) பின்வரும் கூற்றுக்கள் "உண்மை" அல்லது "பொய்" என்பதைக் குறிப்பிடுக.

அ) கம்பனிகளைப் பொருத்தவரை அவற்றில் அரசின் சட்ட ரீதியான ஆதிக்கம் குறைவாகும்.

ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குத் தேவையான நிதியினை பொதுமக்களுக்கு பங்குகளை வழங்கி திரட்ட முடியும்.

இ) தனியுரிமை வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கான சான்றிதழ் குறித்த பிரதேச செயலாளர்களினால் வழங்கப்படும்.

ஈ) வணிகமொன்றைப் பதிவு செய்வதனால் அதற்கு அடையாளமொன்று கிடைக்கப்பெறுகின்றது.

iii) முகாமைத்துவம் என்றால் என்ன?

iv) பின்வரும் வணிகங்களில் முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்பவர் யார் என்பதைக் குறிப்பிடுக.

அ) தனியுரிமை ஆ) பங்குடைமை இ) கம்பனி ஈ) கூட்டுத்தாபனம்

(மொத்தம் 10 புள்ளிகள்)



kalvi.lk

Scanned with CamScanner

Follow and Get papers Daily ..!

Education கல்வி அධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page